# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை−600 035. தொலைபேசி எண்.044−2951 5590

## ஆணை நாள். 06.10.2026

## முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : CP-1230/A/2024**

திரு. B.சுரேந்தர் -- மனுதாரர்

*/எதிர்/*

1. பொதுத் தகவல் அலுவலர்/
   ஆராய்ச்சி அலுவலர்,
   தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
   வரலாற்று ஆராய்ச்சி,
   எழும்பூர்,
   சென்னை – 600 008
2. பொதுத் தகவல் அலுவலர்/
   துணை இயக்குநர் (மின் ஆளுமை),
   பள்ளிக்கல்வி ஆணையரகம்,
   கல்லூரி சாலை,
   சென்னை – 600 006.
3. பொதுத் தகவல் அலுவலர்/
   அரசு சார்புச் செயலாளர்,
   பள்ளிக் கல்வித் துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை – 600 009

-- பொது அதிகார அமைப்பு

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 06.10.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. B.சுரேந்தர் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.நா.விஜயலஷ்மி, பொதுத் தகவல் அலுவலர் / அரசு சார்புச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை மற்றும்

திருமதி.ஏ.சத்தியபாமா, மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் துணை இயக்குநர் (மின் ஆளுமை), பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை மற்றும் திருமதி சா.ரூபி, பொதுத் தகவல் அலுவலர் மற்றும் கண்காணிப்பாளர் (நிலை–பி), தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி, எழும்பூர், சென்னை ஆகியோர் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 09.04.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் 10–ஆம் வகுப்பு SSLC தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு, UGC–யால் அங்கீகரிக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து முடித்த 2 ஆண்டு ஃபவுண்டேஷன் கோர்ஸ் சான்றிதழுக்கான தேர்வு முடிவுகளின் மதிப்பீட்டு விவரங்களை வழங்குவதற்காகக் அரசாணைகளின் நகல்கள் மற்றும் தகவல்களை வழங்கக் கோரி 10 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலர்/அரசுச் சார்புச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் 17.04.2023 நாளிட்ட கடிதத்தின் படி சட்டப்பிரிவு 6(3)–ன் கீழ் மனுதாரரின் மனுவினை இனம் 2 முதல் 5 மற்றும் இனம் முதல் 10 வரை கோரியுள்ள தகவல்களுக்கு தகவல் வழங்கு பொருட்டு பொதுத் தகவல் அலுவலர்/ பள்ளிக் கல்வி துணை இயக்குநர் (மின் ஆளுமை), பள்ளிக் கல்வி ஆணையரகம், சென்னை அவர்களுக்கு மாற்றம் செய்துள்ளார். மேலும் இனம் 1க்கான தகவல்களை வழங்கும் பொருட்டு பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி, எழும்பூர், சென்னை அவர்களுக்கு பிரிவு 6(3)இன் கீழ் 17.04.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக மாற்றம் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர் 05.08.2023 நாளிட்ட கடிதத்தின்படி பரிவு 19(1) ன் கீழ் முதல் மேல் முறையீட்டு அலுவலருக்கு மனு தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர் 17.02.2024 நாளிட்ட பிரிவு 18(1)–ன்கீழ் முதல் புகார் மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 06.10.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி, எழும்பூர், சென்னை அவர்கள் மனுதாரருக்கு இனம் 1க்கான தகவல்களை ஏற்கனவே 04.09.2023 மற்றும் 15.09.2023 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், பொதுத் தகவல் அலுவலர் / அரசுச் சார்புச் செயலாளர் , பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் 19.06.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக இனம் 6 மற்றும் 7க்கான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், மேல்முறையீட்டு அலுவலர், மற்றும் துணை இயக்குநர் (மின் ஆளுமை), பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை அவர்கள் 05.10.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை பதிவஞ்சல் மூலம் வழங்கியுள்ளதாக

ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகல் மற்றும் ஆவண நகல்களுடன் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களில், இனம் 2, 3, 4, 5, ஆகிய இனங்களுக்கான முழுமையான தகவல்கள் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் துணை இயக்குநர் (மின் ஆளுமை), பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை அவர்கள் வழங்கவில்லை எனவும், உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 19(8)(b)இன் கீழ் தனக்கு நஷ்டஈடு வழங்க உத்தரவிடுமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு இனம் 2, 3, 4,மற்றும் 5 ஆகிய இனங்களுக்கான முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது, எனவே ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய*** இனம், 2, 3, 4 மற்றும் 5 ஆகிய இனங்களுக்கான ***முழுமையான தகவல்களை தேடிப் பார்த்து வழங்கிவிட்டு, அதன் உரிய ஆவண நகல்களுடன் "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் விசாரணை அறிக்கை நகலுடன் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 03.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு இவ்வாணையம் உத்தரவிடுகின்றது.***

ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண் CP-1230/A/2024</u>**

1. பொதுத் தகவல் அலுவலர்/
   ஆராய்ச்சி அலுவலர்,
   தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி,
   எழும்பூர்,
   சென்னை – 600 008

**<u>வழக்கு எண் CP-1230/A/2024</u>**

2. பொதுத் தகவல் அலுவலர்/
   துணை இயக்குநர் (மின் ஆளுமை),
   பள்ளிக்கல்வி ஆணையரகம்,
   கல்லூரி சாலை,
   சென்னை – 600 006.
3. பொதுத் தகவல் அலுவலர்/
   அரசு சார்புச் செயலாளர்,
   பள்ளிக் கல்வித் துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை – 600 009

**<u>மனுதாரர்:</u>**
திரு. B.சுரேந்தர்
மனை எண். 3007–B,
கதவு எண்.4/668,
நிர்மலா இல்லம் முதல் தளம்,
ராம் நகர் தெற்கு,
5வது பிரதான சாலை,
மடிப்பாக்கம்,
சென்னை – 600091.

Copy to File

Je/PA 06.10.2026